**வரையறுக்கப்பட்ட இலங்கை கட்டிடப் பொருட்கள் கூட்டுத்தாபனம் - 2023**

---

வரையறுக்கப்பட்ட இலங்கை கட்டிடப் பொருட்கள் கூட்டுத்தாபனத்தின் (“கம்பனி”) 2023 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த காலப்பகுதிக்கான செயற்பாட்டு நடவடிக்கைகள் தொடர்பாக 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளினதும், 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள ஏற்பாடுகளினதும் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 150(1) ஆம் பிரிவின் பிரகாரம் சமர்ப்பிக்கப்பட வேண்டிய 2019 ஆம் ஆண்டு முதல் 2023 வரையான நிதிக்கூற்றுக்கள் 2024 நவம்பர் 25 ஆந் திகதி வரையிலும் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. இலங்கை சனநாயக சோசலிச குடியரசு அரசியலமைப்பின் 154(6) உறுப்புரையின் பிரகாரம் என்னால் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென கருதுகின்ற கம்பனியின் செயற்பாட்டு நடவடிக்கைகள் தொடர்பான எனது அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காண்பிக்கப்படுகின்றன.

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

கம்பனியின் நிதிக்கூற்றுக்களை சிறிய மற்றும் நடுத்தர அளவிலான முயற்சிகளுக்கான (SLFRS for SMEs) இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.2 நிதிக் கூற்றுக்களை சமர்ப்பித்தல்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2021 நவம்பர் 16 ஆந் திகதிய இலக்கம் 01/2021 என்ற பொது முயற்சிகள் சுற்றறிக்கையில் உள்ளடக்கப்பட்ட கைநூலில் 6.6 ஆம் பந்தியின் பிரகாரம் கணக்காண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் வருடாந்த நிதிக் கூற்றுக்கள் மற்றம் வரைவு வருடாந்த அறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்க வேண்டியிருந்த போதிலும் வரையறுக்கப்பட்ட இலங்கை கட்டிடப் பொருட்கள் கூட்டுத்தாபனத்தால் 2018 ஆம் ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 04 வருடங்களும் 08 மாதங்களும் தாமதமாகி சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.<br>கம்பனியால் பயன்படுத்தப்படுகின்ற கணனி சேவர் இயந்திரம் 2019 ஆம் ஆண்டின் போது வைரஸ் தாக்கத்தின் காரணமாக செயலிழந்து இருந்தமையும் அந்த சந்தர்ப்பத்தில் தரவுகளின் சேமிப்பு (Backups) களஞ்சியப்படுத்தப்படாமையின் | 2018 இன் நிதிக் கூற்றுக்கள் கணக்காய்விற்காக 2023 ஒக்தோபர் 27 ஆந் திகதி வழங்கப்பட்டிருந்தது. 2019, 2020, 2021 மற்றும் 2022 இன் நிதிக் கூற்றுக்கள் தற்போது வரைவு செய்யப்பட்டுள்ளது.<br><br>2019 ஆம் ஆண்டில் செயலிழந்த கணனி முறைமை தொடர்பாக குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் மேற்கொள்ளப்பட்ட முறைப்பாடு தொடர்பாக கணக்காய்விற்கு அது தொடர்பான அறிக்கை ஒன்று 2024 மார்ச் 04 ஆந் திகதி வரை கிடைத்திருக்க வில்லை. | சுற்றறிக்கை ஆலோசனையின் பிரகாரம் நிதிக் கூற்றுக்களைச் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

காரணமாக கணக்குகளைத் தயாரிப்பதற்குத் தேவையான தகவல்கள் காணப்படாதிருந்தததாகக் காண்பித்து நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. 2022 ஏப்ரல் 19 ஆம் திகதி நடைபெற்ற பொது முயற்சிகள் குழுவின் கட்டளையின் அடிப்படையில் இது தொடர்பாக 2022 ஏப்ரல் 28 ஆந் திகதி குற்றப்புலனாய்வு திணைக்களத்திற்கு முறைப்பாடு செய்யப்பட்டிருந்த போதிலும் அந்த அறிக்கை தொடர்பான தற்போதைய நிலைமை கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 2. செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 காணப்படுகின்ற சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கம்பனியால் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு தயாரிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் கம்பனியின் சொத்துக்கள் ரூபா 549.05 மில்லியன் தொகையும், பொறுப்புக்கள் ரூபா 1,479.27 மில்லியன் தொகையும், உரிமை மூலதனம் ரூபா (930.22) மில்லியன் தொகையும், வருமானம் ரூபா 222.68 மில்லியன் தொகையும் மற்றும் செலவினம் ரூபா (184.82) மில்லியன் தொகையும் ஆக இருந்தது. | விற்பனைகளை அதிகரித்துக் கொள்வதற்கும் நிறுவனத்திற்குரிய தற்போது உள்ள வளங்களை மிகவும் செயற்திறனாக ஈடுபடுத்தும் நோக்காகக் கொண்டு புதிய வியாபார திட்டம் ஒன்று தயாரித்து அதற்கு இணங்க இலாபகரமான நிறுவனமாக மாற்றவதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது. | கம்பனியின் சொத்துக்களை செயற்திறனாக பயன்படுத்துவதற்கும், பொறுப்புக்களை தீர்த்து நிதிக் கிரயத்தை குறைத்து இலாபத்தை அதிகரித்துக் கொள்வதற்கும் முகாமைத்துவ செயற்பாடுகள் திட்டமிடப்படல் வேண்டும். |
| (ஆ) | கம்பனி 2014 ஆம் ஆண்டு முதல் 2018 ஆம் ஆண்டு வரை கம்பனியின் தேறிய இலாப விகிதம் (3.5) முதல் (75) வரை குறைவடைந்துள்ளது. | விற்பனை அளவு (sales volume) அதிகரித்தல் மற்றும் நிறுவன செலவினங்களை முகாமைத்துவம் செய்து நிறுவனத்தை இலாபகரமானதாக நியமிப்பதற்கு மீண்டும் உட்படுத்துவதற்கு திட்டங்கள் தயாரித்து தேவையான நடவடிக்கை எடுக்கப்படும். | கம்பனியின் இலாப விகிதம் ஒழுங்கு படிப்படியாக மற்றும் உபாய வழிகளை கட்டியொழுப்புவதற்காக விரைவாக நடவடிக்கை எடுத்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும். |

### 2.2 உள்ளகக் கட்டுப்பாடு

கம்பனியின் கொள்வனவுகள், விற்பனைத் துறைகளுக்காக இனங்காணப்பட்ட உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமை மிகவும் நலிவான மட்டத்தில் காணப்படுகின்றமை அவதானிக்கப்பட்டதுடன் அத தொடர்பாக கணக்காய்வின் போது வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் பின்வருமாறு.

### 2.2.1 பொருட்கள் கொள்வனவு செய்தல்

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | அரசாங்கத்தின் பெறுகைகள் வழிகாட்டியின் பிரகாரம் பெறுகைச் செயற்பாடுகளில் வெளிப்படைத் தன்மையை அதிகரித்துக் கொள்வதற்காகவும், தாமதங்களைக் குறைப்பதற்காகவும், மக்களுக்காக நிதி ரீதியான மிகவும் நலன் வாய்ந்த மற்றும் தரம் உடைய உயர்ந்த வேலைகள் மற்றும் வழங்கல்களைப் பெற்றுக் கொள்வதற்கு கம்பனி நடவடிக்கை எடுக்காதிருந்ததுடன் 2023 சனவரி 30 ஆந் திகதிய இலக்கம் 296 என்ற பணிப்பாளர் சபைத் தீர்மானத்தின் பிரகாரம் அரசாங்கத்தின் பெறுகைகள் வழிகாட்டிக் கோவைக்கு முரணாக 05 உத்தியோகத்தர்கள் வீதம் உள்ளடக்கிய 02 குழுக்கள் பெறுகை தீர்மானம் எடுப்பதற்காக நியமிக்கப்பட்டிருந்தனர். | குறித்துரைத்த பெறுகை நடைமுறைகளுக்கு முரணாகாத வகையில் எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். | நிறுவனத்திற்காக கொள்வனவுகளை மேற்கொள்ளும் போது அரசாங்கத்தின் பெறுகை வழிகாட்டியின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | பெறுகைகள் வழிகாட்டியின் 2.8.1(அ) இன் பிரகாரம் திணைக்களப் பெறுகைக் குழு விடயத்தின் கீழ் கொண்டு வரப்பட்ட சகல பெறுகைகளுக்காகவும் தொழில் நுட்ப மதிப்பீட்டுக் குழு ஸ்தாபிக்கப்பட்டிருந்த போதிலும் கம்பனியின் பெறுகைத் தீர்மானம் எடுக்கும் நோக்கில் தொழில் நுட்ப மதிப்பீட்டுக் குழு ஒன்று ஸ்தாபிக்கப்பட்டிருக்க வில்லை. பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 2.8.1(ஆ) இன் பிரகாரம் கொள்வனவு செய்வதற்காக தேவையான விடயம் தொடர்பான விசேட நிபுனர்களின் மதிப்பீடு பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. | புதிய பணிப்பாளர் சபை நியமிக்கப்பட்ட பின்னர் உரிய தொழில் நுட்ப மதிப்பீட்டுக் குழு பெறுகைகள் வழிகாட்டியின் பிரகாரம் நடவடிக்கை எடுப்பதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும். | கம்பனியால் கொள்வனவுகளை மேற்கொள்ளும் போது 2006 சனவரி 25 ஆம் திகதிய அரசாங்கத்தின் பெறுகைகள் வழிகாட்டியின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 5.6.1 இன் பிரகாரம் கேள்வி கோரும் ஆவணங்களில் வியாபாரப் பெயர் குறிப்பிட முடியாதிருந்தமை நிபந்தனைகளில் உள்ளடக்கப்பட்டிருந்த போதிலும் 2023 ஆம் ஆண்டில் ரூபா 16.78 | கொள்வனவாளர்களின் விசேட அடையாளம் குறிப்பிடப்படுகின்ற சந்தர்ப்பங்கள் தவிர ஏனைய எந்த ஒர சந்தர்ப்பங்களின் போது கொள்வனவுகளில் | அரசாங்கத்தின் பெறுகைகள் வழிகாட்டியின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | மில்லியன் பெறுமதியான பொருட்கள் கொள்வனவு செய்யும் போது வியாபாரப் பெயரை அடிப்படையாகக் கொண்டு கூறுவிலை மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் கூட்டுத்தாபனம் தமது பெறுகைத் தீர்மானம் எடுக்கும் போது அந்த உரித்தினை மாத்திரம் அடிப்படையாகக் கொண்டிருந்தது. | வியாபார பெயர் குறிப்பிடாமல் இருப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | |
| (ஈ) | வழங்குனர்களுக்காக கொடுப்பனவு செய்யும் போது விலைப் பட்டியல், பொருள் பெறுவனவுப் பத்திரம், கொள்வனவுக் கட்டளை யாவும் பரீட்சிக்கப்பட்டு கொடுப்பனவு உறுதிச்சீட்டு தயாரித்து பரீட்சித்து பணத்தை செலுத்துவதற்காக அங்கீகாரம் வழங்க வேண்டியிருந்த போதிலும் கம்பனியால் கொள்வனவுக் கட்டளையுடன் பெறுமதியில் 50 சதவீதம் கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்தது. | வழங்குனர்களிடம் இருந்து பொருட்களைப் பெற்றுக் கொள்ளும் போது கடன் அடிப்படையில் பெற்றுக் கொள்ளல் கஸ்டமாக எழுந்திருந்தமையின் காரணமாக இவ்வாறு கம்பனியால் கொள்வனவுக் கட்டளையுடன் 50 சதவீத தொகையில் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தது. | வழங்குனர்களுக்கு கொடுப்பனவுகளை மேற்கொள்ளும் பொது உரிய பிரகாரம் பொருட்கள் பெற்றமையை உறுதிப்படுத்திய பின்னர் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படல் வேண்டும். |

### 2.2.2 பொருட்கள் விற்பனை

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2023 ஆம் ஆண்டிற்காக கூட்டுத்தாபனத்தின் கணக்குப் பிரிவில் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையின் பிரகாரம் விற்பனை வருமானம் ரூபா 469.56 மில்லியன் ஆக இருந்ததுடன் விற்பனைப் பிரிவில் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையின் படி விற்பனை வரமானம் ரூபா 418.36 மில்லியன் ஆகும். அதன் பிரகாரம் இந்த இரண்டு பிரிவுகளுக்கு இடையே விற்பனை வருமானத்தில் ரூபா 51.30 மில்லியன் வேறுபாடு அவதானிக்கப்பட்டது. | விற்பனைப் பிரிவில் இருந்து கிடைத்த விற்பனைத் தரவுகள் மற்றும் நிதிப் பிரிவில் கணக்கீடு செய்யப்பட்ட விற்பனைத் தரவுகளுக்கு இடையே காணப்படுகின்ற வேறுபாடுகளை உறுதிப்படுத்திக் கொள்வதற்காக உரிய இணக்கங்கள் மேற்கொள்ளப்படுகின்றது. | சரியான விற்பனை வருமானத்தை இனங்கண்டு கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | 19 விற்பனை நிலையங்களில் 2022 ஆம் ஆண்டின் விற்பனை வருமானம் ரூபா 3,324.18 மில்லியன் ஆக இருந்ததுடன் 2023 ஆம் ஆண்டில் விற்பனை வருமானம் ரூபா 418.36 | 2022 ஆம் ஆண்டில் டையில் இறக்குமதி செய்யும் விசேட சந்தர்ப்பம் ஒன்று நிறுவனத்திற்கு உரித்தாகியதன் அடிப்படையில் அதிக | விற்பனை வருமானத்தை அதிகரித்துக் கொள்வதற்கான மாற்று உபாய வழிகள் அறிமுகப்படுத்தப்படல் |

| | | |
|---|---|---|
| மில்லியன் ஆகும். 2022 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது ரூபா 2,905.82 மில்லியன் அதாவது 87 சதவீத விற்பனை வருமானம் குறைவடைந்திருந்தமை அவதானிக்கப்பட்டது. | விற்பனை மட்டத்தை அடைந்து கொள்வதற்கு முடியுமாக இருந்தது. 2023 ஆம் ஆண்டில் ஆரம்பத்துடன் அந்த செயற்திட்ட நடவடிக்கைகள் முடிவடைந்தமையினால் அத்திகதியில் சாதாரண விற்பனை கிளைகள் மூலம் விற்பனைகள் மேற்கொள்ளப்பட்டது. | வேண்டும். |

**2.3 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய மீதிகள் தொடர்பாக உறுதிப்படுத்தல் மற்றும் நாளது வரையாக்கப்பட்ட காலப் பகுப்பாய்லு என்பன கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் 2024 யூன் 30 இல் உள்ளவாறு பெறவேண்டிய பணத்தின் கூட்டுமொத்தம் ரூபா 453.60 மில்லியன் மற்றும் வெளித் தரப்பினருக்கு தீர்த்து வைக்க வேண்டிய பொறுப்புக்களின் கூட்டுமொத்தம் ரூபா 471.98 மில்லியன் ஆக காணப்பட்டது. | 2023 ஆம் ஆண்டுக்குரிய தகவல்கள் 2025 ஆகஸ்ட் மாதத்தின் போது உங்களது நிறுவனத்திற்கு சமர்ப்பிப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. குறுங்காலக் கடன் உரிமையாளர்களுக்கு செலுத்தும் நடவடிக்கைகள் தொடர்பான திட்டம் ஒன்று தயாரித்து தேவையான நடவடிக்கை எடுப்பதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது. | பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய மீதிகள் தொடர்பாக நாளது வரையான தகவல் அறிக்கை பேணிச் செல்வதற்கும், ஆண்டின் இறுதியில் மீதியை உறுதிப்படுத்தி விரைவாக அறவிடுவதற்கும் முகாமைத்துவம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ)(i) | நிறுவனத்தால் முறையான அங்கீகாரம் மற்றும் முறையான திட்டம் ஒன்று இன்றி சம்பளத்தில் இருந்து அறவிடும் அடிப்படையில் கம்பனியின் ஊழியர்களுக்கு கட்டிடப் பொருட்கள் வழங்கப்பட்டிருந்ததுடன் 2024 ஆகஸ்ட் 30 ஆந் திகதி வரையில் ரூபா 1.38 மில்லியன் தொகை 13 ஊழியர்களிடம் இருந்து அறவிட வேண்டி இருந்தது. கடன் அடிப்படையில் பொருட்களை வழங்குவதற்காக எந்த ஒரு அங்கீகாரமும் பெறப்படாது இருந்ததுடன் இந்தப் பொருட்கள் வெளித் தரப்பினருக்கு விற்பனை செய்து ஒரே தடவையில் பணம் பெறக் கூடியதாக இருந்த | பொது முகாமையாளரின் அங்கீகாரம் கிடைத்துள்ளது. இந்த பணம் பகுதி பகுதியாக அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | பெற வேண்டிய கடன் மீதிகளை விரைவாக அறவிடல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | சந்தர்ப்பங்கள் இழக்கப்பட்டிருந்தது. | | |
| (ii) | ஒரு தடவை வழங்கப்பட்ட பொருட்களுக்கான பெறுமதி<br><br>அறவிடுவதற்கு முன் எந்த ஒரு வரையறையும் இன்றி அந்த நபர்களுக்கு மீண்டும் பொருட்கள் வழங்கப்பட்டிருந்தது. | இவ்வாறான நிலைமை மீண்டும் ஏற்படாமல்<br><br>இருப்பதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்படும். | கடன் அடிப்படையில் பொருட்களை வழங்கும்<br><br>போது அங்கீகாரிக்கப்பட்ட திட்ட முறைமையின் கீழ் மேற்கொள்ளப்படல் வேண்டும். |
| (இ) | 2004 சனவரி முதல் 2013 திசெம்பர் வரை ஊழியர் சேமலாப நிதியம் குறித்துரைத்த பிரகாரம் செலுத்தாமையினால் நீதிமன்றக் கட்டளையின் அடிப்படையில் ரூபா 3.98 மில்லியன் மிகைக் கட்டணம் செலுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது.<br>மாதாந்தம் ரூபா 50,000 வீதம் கூட்டுமொத்தமாக ரூபா 2.85 மில்லியன் 2023 திசெம்பர் 31 ஆம் திகதி வரையில் செலுத்தப்பட்டிருந்ததுடன் மேலும் ரூபா 1.13 மில்லியன் மீதி செலுத்த வேண்டி உள்ளது. | மேலும் ரூபா 1.13 மில்லியன் தொகை செலுத்தப்பட்டுள்ளது. | நிலுவை ஊழியர் சேமலாப நிதியத்தை விரைவாக செலுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | 2007 செப்தெம்பர் 27 ஆந் திகதிய அமப/07/1625/342/021 என்ற அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் கொழும்பு 12, ஸ்ரீ சங்கராஜ மாவத்ததையில் அமைந்துள்ள கட்டிடப் பொருட்கள் கூட்டுத்தாபனத்திற்குரிய காணியில் 100 பேர்ச் ஐ உடைய நிலப்பகுதி உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு கையளித்து ரூபா 50 மில்லியன் முற்பணத் தொகை 2008 பெப்ரவரி 28 ஆந் திகதி கம்பனிக்கு கிடைத்திருந்தது.<br><br>பெறப்பட்ட முற்பணத் தொகையை மீளச் செலுத்த வேண்டியிருந்த போதிலும் கம்பனியால் இந்த ரூபா 50 மில்லியன் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு செலுத்துவதற்கு இதுவரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | இந்த முற்பணத் தொகையை மீள செலுத்துதல் தொடர்பாக புதிய பணிப்பாளர் சபை நியமிக்கப்பட்ட பின்னர் தீர்மானம் எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | அமைச்சரவைத் தீர்மானத்திற்கு பிரகாரம் முற்பணத் தொகையை மீளச் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**2.4 நீண்டகால மற்றும் குறுங்காலக் கடன்கள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | தொழிற்படு மூலதனத் தேவையைப் பூர்த்தி செய்யும் நோக்கில் கம்பனியினால் ரூபா 150 மில்லியன் குறுங்கால கடன் தொகை ஒன்று 2017 மார்ச் 02 ஆம் திகதி முதல் 2018 ஏப்ரல் 10 ஆம் திகதி வரையான காலப் பகுதியில் 03 சந்தர்ப்பங்களின் போது மக்கள் வங்கியில் இருந்து பெறப்பட்டிருந்தது. இந்த கடன் தொகை வழங்கும் நோக்கம் இன்றி கம்பனியின் நிர்வாக செலவினங்களை உள்ளடக்கிய ஏனைய செலவினங்களும் இந்த கடன் தொகையில் இருந்து இதுவரை செலவிடப்பட்டுள்ளது.<br><br>எனினும் இந்த கடன் தொகை குறித்துரைத்த பிரகாரம் தீர்த்து வைப்பதற்கு கம்பனி தவறியமையால் 2023 ஆகஸ்ட் 22 இல் உள்ளவாறு செலுத்த வேண்டிய கடன் பணம் மற்றும் அட்டுறு வட்டியுடன் மொத்த நிலுவைத் தொகை ரூபா 226.46 மில்லியன் ஆக இருந்ததுடன் அதற்காக செலுத்த வேண்டிய தண்டப்பணம் ரூபா 19.07 மில்லியன் ஆகும். | அமைச்சின் ஆலோசனையின் அடிப்படையில் மற்றும் பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தில் இந்த கடனைச் செலுத்துதல் தொடர்பாக உரிய வங்கியுடன் இணக்கப்பாட்டிற்கு வருவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | கடன் உடன்படிக்கை நிபந்தனையின் பிரகாரம் கடன் பணத்தை முதலீடு செய்து கடனைத் தீர்த்து வைக்காமை தொடர்பாக முகாமைத்துவம் பொறுப்பாக இருந்தல் வேண்டும். |
| (ஆ) | நிதிக் கஸ்டங்களை வெற்றிகொண்டு நிர்மாண கைத்தொழிலை வலுப்படுத்தும் தரப்பினராக உட்படுவதற்கு கம்பனிக்கு இயலுமான வகையில் திறைசேரி பிணையின் அடிப்படையில் 2018 மார்ச் 28 ஆந் திகதிய இலக்கம் அமப/18/0504/736/007 என்ற அமைச்சரவை அங்கீகாரம் இல் மக்கள் வங்கியால் ரூபா 500 மில்லியன் கடன் தொகை 2018 ஒக்தோபர் 23 ஆந் திகதி கம்பனிக்கு வழங்கப்பட்டிருந்தது. அதில் அத் திகதி வரையில் இலங்கை வங்கியில் அறவிடுவதற்கு இருந்த ரூபா 199.05 மில்லியன் தொகை குறைக்கப்பட்டு மிகுதித் தொகையான ரூபா 301.38 மில்லியன் நிறுவனத்திற்கு | முன்னாள் காணப்பட்ட முகாமைத்துவத்தின் தீர்மானத்தின் அடிப்படையில் இந்தக் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அறிக்கையிடப்பட்டுள்ளது. கடனைப் பெற்றுக் கொண்ட நோக்கங்களுக்கு முரணாக செலவிடல் எதிர்காலத்தில் மேற்கொள்ளாது இருந்தல் வேண்டும். | கடன் தொகையை பெறப்பட்ட நோக்கத்திற்காக ஈடுபடுத்துவதற்கு முகாமைத்துவம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | வழங்கப்பட்டிருந்தது. அதனால் 35 சதவீதம் அதாவது ரூபா 105.98 மில்லியன் கடன் பெற்றுக் கொள்ளப்பட்ட நோக்கத்திற்கு முரணான செலவினம் ஆன ஊழியர் சம்பளம் செலுத்துதல், ஊழியர் சேமலாப நிதியம்/ நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் செலுத்துதல், ஏனைய நிர்வாக செலவினம், கடன் வட்டிக் கொடுப்பனவு, மேலதிகப் பற்று தீர்த்தல், விழா முற்பணத்திற்காக செலவிடப்பட்டிருந்தது. | | |
| (இ) | இந்த ரூபா 500 மில்லியன் கடன் தொகையில் 2023 திசெம்பர் 28 ஆந் திகதியில் உள்ளவாறு நிலுவை வட்டித் தொகை ரூபா 321.14 மில்லியன் ஆகும். அவ்வாறே 05 வருட சலுகைக் காலம் 2023 ஒக்தோபர் 23 ஆந் திகதி முடிவடைந்ததுடன் அதன் பின்னர் கடன் தொகையில் மூலதன பங்கு குறித்துரைத்த பிரகாரம் செலுத்த வேண்டியிருந்த போதும் அது தொடர்பாக கொடுப்பனவுத் திட்டம் ஒன்று சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | இந்தக் கடனை செலுத்துதல் தொடர்பாக உரிய வங்கியுடன் இணக்கப்பாட்டிற்கு வருவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | முறையான திட்டம் மற்றும் திட்டமிடலின் கீழ் வங்கிக் கடன் தொகையை செலுத்தி பூர்த்தி செய்வதற்கு கம்பனி நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2.5 பெறுகைகள் முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கம்பனியால் பயன் படுத்தப்படுகின்ற மென்பொருள் முறைமை செயற்திறனின்மையின் காரணமாக புதிய கணனி முறைமை ஒன்று கொள்வனவு செய்வதற்காக 2021 ஆம் ஆண்டின் போது 05 நிறுவனங்களில் இருந்து வரையறுக்கப்பட்ட கூறுவிலைகள் கோரப்பட்டிருந்தது. இதற்கான மாதிரிகள் நிறுவனத்தால் தயாரிக்கப்பட்டிருந்த போதும் அரசாங்கத்தின் பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 4.3 ஆம் பிரிவின் பிரகாரம் நிறுவனத்தால் மொத்தக் கிரய மதிப்பீடு ஒன்று தயாரித்து அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் சரியாக அரசாங்கப் பெறுகைகள் வழிகாட்டியின் பிரகாரம் அமுல்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்ககப்பட்டுள்ளது. | பெறுகைகள் வழிகாட்டிக்கு இணங்க பெறுகைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும். |
| (ஆ) | கூறுவிலைகள் கோரப்பட்ட 05 நிறுவனங்களில் இரண்டு மாத்திரம் கூறுவிலைகள் அனுப்பி இருந்ததுடன் | எதிர்காலக் கொடுக்கல் வாங்கல்களின் | பெறுகைகள் வழிகாட்டிக்கு இணங்க பெறுகைகள் மேற்கொள்ளப்படல் |

| | | | |
|---|---|---|---|
| | அரசாங்கத்தின் பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 2.8 ஆம் பிரிவிற்கு இணங்காத வகையில் 07 அங்கத்தவர்களைக் கொண்ட தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் மூலம் ஒரு கம்பனிக்கு ரூபா 6.91 மில்லியன் பெறுமதியில் உரிய மென்பொருள் முறைமையை கொள்வனவு செய்வதற்கு பரிந்துரை செய்யப்பட்டிருந்தது. அவ்வாறு சமர்ப்பித்த கூறுவிலைகள் தொடர்பான தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | போது தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு சரியான முறையில் நியமித்து உரிய வழிகாட்டிகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படும். | வேண்டும். |
| (இ) | 2024 ஆகஸ்ட் 15 கணக்காய்வுத் திகதி வரையிலும் கம்பனிக்கு பொருத்தமான கணனி மென்பொருள் முறைமை ஒன்றைக் கொள்வனவு செய்யாது இருந்ததுடன் கம்பனியின் விற்பனை, கொள்வனவு மற்றும் வங்கி மீதிகளின் தரவுகளை உள்ளடக்கும் போது கணிசமான வழுக்கள் அவதானிக்கப்பட்டது. | இந்த விடயங்கள் தொடர்பாக ஆய்வு செய்து காணப்படுகின்ற கணனி மென்பொருளை நாளது வரையாக்குவதற்தே கா அல்லது குறித்துரைத்த பெறுகை நடைமுறைகளின் கீழ் புதிய மென்பொருளை ஒன்றைக் கொள்வனவு செய்வதற்கோ நடவடிக்கை எடுக்கப்படும். | கம்பனியில் காணப்படுகின்ற கணனி மென்பொருளை நாளது வரையாக்குவதற்கோ அல்லது பெறுகைகள் வழிகாட்டிக்கு இணங்க புதிய மென்பொருளைக் கொள்வனவு செய்வதற்கோ நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | **பிரதமர் / ஐந்தாவது நிறைவேற்று சனாதிபதியின் உத்தியோகபூர்வ இல்லத்தின் திருத்தியமைத்தல் மற்றும் நவீன மயப்படுத்துதல்**<br><br>2021 ஒக்தோபர் 26 ஆந் திகதிய அமப 21/1779/302/002/-1 என்ற அமைச்சரவைத் தீர்மானத்தின் மூலம் பிரதமர்/ ஐந்தாவது நிறைவேற்று சனாபதியின் உத்தியோகபூர்வ இல்லத்தை திருத்தியமைத்தல் மற்றும் நவீனமயப்படுத்தும் நடவடிக்கைகளுக்காக அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்ததுடன் திருத்தி அமைத்தல் மற்றும் பராமரிப்புகளை மேற்கொள்வதற்கு கம்பனியால் ரூபா 639.22 மில்லியன் பெறுமதியான பட்டியல் 2024 மே 14 ஆந் திகதி வரையில் விநியோகிக்கப்பட்டிருந்தது. | | |

| | | | |
|---|---|---|---|
| (i) | இந்த நவீன மயப்படுத்தல் நடவடிக்கைகளுக்காக பெறுகைகள் நடைமுறைகளுக்குப் புறம்பாக உடன்படிக்கை இன்றி ரூபா 13.07 மில்லியன் செலுத்தி தெரிவு செய்யப்பட்ட கட்டிடக் கலைஞரின் வாய்மொழி மூல ஆலோசனையின் அடிப்படையில் இந்த செயற்திட்டத்திற்குத் தேவையான பொருட்களைப் பெற்றுக் கொள்வதற்கு அவர்களால் பெயரிடப்பட்ட 16 வழங்குனர்களிடமிருந்து கூறுவிலை கோராமல் கட்டிடப் பொருட்கள் கூட்டுத்தாபனத்தின் கொள்வனவுக் கட்டளையின் அடிப்படையில் இந்த உத்தியோகபூர்வ இல்ல செயற்திட்டத்திற்கு பொருட்கள் விநியோகிக்கப்பட்டு பட்டியல் இடப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் இவ்வாறான முறையில் கொடுக்கல் வாங்கல்களை மேற்கொள்ளும் போது பெறுகை வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படும். | பெறுகைகள் வழிகாட்டியயின் பிரகாரம் வழங்குனர்களைத் தெரிவு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ii) | செயற்திட்டத்திற்காக ரூபா 1,196.25 மில்லியன் பெறுமதியான பட்டியல் ஒன்று விநியோகிக்கப்பட்டிருந்த போதிலும் இதில் ரூபா 557.03 மில்லியன் கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்கள் பிழையாக பயன்படுத்தப்பட்டிருந்ததுடன் இதன் மூலம் கம்பயின் விற்பனைப் பெறுமதி அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | நிறுவன மட்டத்தில் இது தொடர்பான தகவல்களை வெளிப்படுத்திக் கொள்வதற்கு உள்ளகக் கணக்காய்வுப் பிரிவிற்கு அனுப்பப்பட்டுள்ளது. | உள்ளபடியான பட்டியல்களின் பெறுமதியின் அடிப்படையில் இனங்காணப்பட்ட சரியான விற்பனைப் பெறுமதி நிதிக் கூற்றுக்களில் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |

## 2.6 வரி பிரமாணங்களுடன் இணங்காமை

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கம்பனியின் டையில் செயல்திட்டத்தின் கீழ் 2021 செப்தெம்பர் மாதம் முதல் 2023 திசெம்பர் 31 வரை ரூபா 2,924.73 மில்லியன் விற்பனை வருமானம் ஒன்று பெறப்பட்டிருந்த போதிலும் 2002 இன் 14 ஆம் இலக்க பெறுமதி சேர் வரி சட்டத்தின் கீழ் அறவிடப்பட்ட பெறுமதி சேர் வரி ரூபா 129.59 மில்லியன் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு அனுப்பட்டிருக்கவில்லை. | 2021 ஆம் ஆண்டில் 4 ஆவது காலாண்டிற்கு உரிய தரவுகளை உள்ளடக்கி இருந்ததுடன் அது முடிவடைந்த பின்னர் மூன்றாவது மற்றும் நான்காவது காலாண்டுக்கு உரிய பெறுமதி சேர் வரியின் அடிப்படையிலான பெறுமதி வரி அறிக்கை (vat return) இல் சீராக்கப்பட்டு தேவையான நடவடிக்கை எடுக்கப்படும். | பெறுமதி சேர் வரிச்சட்டத்தின் பிரகாரம் அறவிடப்பட்ட வரித் தொகை உடனடியாக உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு அனுப்புவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | கொழும்பு மாநகர சபைக்கு செலுத்த வேண்டிய 2007 ஆம் ஆண்டு முதல் 2023 திசெம்பர் | நிறுவனத்தின் நிதி நிலைமையின் பிரகாரம் எதிர்காலத்தின் போது | விரைவாக செலுத்த வேண்டிய ஆதனவரிகள் தொடர்பாக உரிய |

| | | |
|---|---|---|
| 31 ஆந் திகதி வரையிலான நிலுவை ஆதனவரித் தொகை ரூபா 19.24 மில்லியன் மற்றும் அதற்குரிய தண்டப்பணம் ரூபா 4.34 மில்லியன் 2023 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் தீர்த்து வைக்கப்பட்டிருக்கவில்லை. | அந்த வரித் தொகையை செலுத்துதல் தொடர்பாக மாநகர சபையுடன் இணக்கப்பாட்டிற்கு வருவதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது. | உள்ளூராட்சி நிறுவனத்துடன் இணக்கப்பாட்டிற்கு வருவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**2.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை**

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடான தொடர்பு | | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|---|---|
| (அ) | 2021 நவம்பர் 16 ஆந் திகதிய இலக்கம் பீஈடீ 01/2021 என்ற பொது முயற்சிகள் சுற்றறிக்கை இலக்கம் 6.7 ஆம் பந்தி | வருடாந்த பொருள் மெய்மையாய்வு மேற்கொண்டு அந்த அறிக்கை கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை. | இல் மீளாய்வாண்டிற்கு உரிய பொருள் மெய்மையாய்வு அறிக்கை மேற்கொள்ளப்படுகின்றது.<br><br>பணிப்பாளர் சபை நியமித்த பின்னர் அதன் அங்கீகாரத்துடன் உரிய அறிக்கை கணக்காய்விற்கு கையளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சுற்றறிக்கை ஆலோசனைகளுக்கு இணங்க பொருள் மெய்மையாய்வு குறித்துரைத்த திகதியில் மேற்கொண்டு அறிக்கை கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | திறைசேரி செயலாளரின் இலக்கம் MF/CG/02/(Cir) மற்றும் 2017 யூன் 28 ஆம் திகதி விநியோகிக்கப்பட்ட சொத்துக்கள் முகாமைத்துவ சுற்றறிக்கை இலக்கம் 01/2017 | கம்பனியால் அலுவலக உபகரணங்கள் மற்றும் தளபாடப் பொருட்கள் தொடர்பாக தகவல்கள் கொன்ரோலர் ஜனரால் அலுவலகத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை. | 2024 ஆம் ஆண்டிற்கு முன்னர் அலுவலக உபகரணங்கள் மற்றும் தளபாட பொருட்கள் தொடர்பான தகவல்கள் திறைசேரியின் கொன்ரோலர் ஜனரால் இற்கு கையளிக்கப்பட்டுள்ளது. | சுற்றறிக்கைகளுக்கு இணங்க அலுவலக உகரணங்கள் மற்றும் தளபாடப் பொருட்கள் தொடர்பான தகவல்கள் கொம்ரோலர் ஜெனரால் அலுவலகத்திற்கு சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |

**2.8 வாகனப் பயன்பாடு**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கம்பனியில் பயன்பாட்டிற்காக கிரயம் ரூபா 26.29 மில்லியன் ஆன 05 வாகனங்கள் அமைச்சினால் 2018 முதல் 2021 ஆம் ஆண்டுகளுக்கு இடையிலான காலத்தில் கையளிக்கப்பட்டிருந்ததுடன் அந்த வாகனங்கள் ஓட முடியாத நிலைமையில் காணப்பட்டதுடன் 2024 ஆகஸ்ட் 16 ஆந் திகதி வரையிலும் பழுதுபார்ப்பதற்கோ | அந்த வாகனங்கள் அமைச்சிற்கு மீண்டும் கையளிப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றது. | முகாமைத்துவத்தால் அமைச்சுக்கு வாகனங்களைக் கையளிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

அல்லது மீண்டும் அமைச்சிற்கு கையளிப்பதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.9 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கம்பனியால் திருகோணமலை, குழியாப்பிட்டி, குருநாகல் மற்றும் தங்காலை விற்பனை நிலையங்கள் வாடகை அடிப்படையில் பெறப்பட்ட கட்டிடங்களில் நடாத்திச் செல்லப்படுவதுடன் தங்காலை விற்பனை நிலையத்திற்காக ரூபா 35,000 மாதாந்த வாடகையும், குருநாகல் மற்றும் குழியாப்பிட்டி விற்பனை நிலையத்திற்காக ரூபா 30,000 வாடகையும், திருகோணமலை விற்பனை நிலையத்திற்காக ரூபா ரூபா 25,000 வீதமும் செலுத்துவதற்கு கம்பனி மற்றும் கட்டிட உரிமையாளர்களுடன் உடன்படிக்கை செய்யப்பட்டிருந்தது. எனினும் இந்த கட்டிடங்கள் தெரிவு செய்யப்பட்ட முறைமை கோவை பரிசோதனையின் போது கணக்காய்வில் அவதானிக்கப்படாது இருந்ததுடன் இந்த தெரிவு செய்தலின் போது வெளிப்படையாக இருக்க வேண்டியவைகள் தொடர்பான ஆர்வம் காண்பித்த சகல தரப்பினருக்கும் சந்தர்ப்பம் வழங்கப்பட்டிருந்ததா என்பது உறுதிப்படுத்தப்படவில்லை. | எதிர்காலத்தில் விற்பனை நிலையங்களை வாடகை அடிப்படையில் பெற்றுக் கொள்ளும் போது வெளிப்படையாக இருக்க வேண்டியவைகள் தொடர்பாக ஆர்வம் காண்பிக்கின்ற சகல தரப்பினருக்கும் சந்தர்ப்பத்தை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | போட்டிக் கேள்வியாளர்களுக்கு இடையே சிறந்த வழங்குனரைத் தெரிவு செய்யும் போது ஆர்வம் காண்பிக்கின்ற சகல தரப்பினரும் பங்குபற்றுவதற்கான சந்தரப்பமும் வழங்கப்படல் வேண்டும். |
| (ஆ) | இந்த வாடகை பணம் மதிப்பீடு எந்த மதிப்பீட்டின் அடிப்படையிலாக கொண்டது என கணக்காய்வில் உறுதிப்படுத்தப்பட வில்லை. 2022 ஆம் ஆண்டிற்கு தயாரிக்கப்பட்டிருந்த வரைவு வருடாந்த கணக்குகளின் பிரகாரம் திருகோணமலை, தங்காலை, குழியாப்பிட்டி மற்றும் குருநாகல் விற்பனை நிலையங்களில் 2022 ஆம் ஆண்டில் பெறப்பட்ட நட்டம் முறையே ரூபா 0.12 மில்லியன், 1.82 மில்லியன், ரூபா 0.41 | பழைய உடன்படிக்கையின் அடிப்படையில் வாடகைப் பணம் செலுத்தப்படுகின்றது. தங்காலை மற்றும் குருநாகல் விற்பனை நிலையங்களை மூடுவதற்கு 2023 சனவரி மாதம் தீர்மானம் எடுக்கப்பட்ட போதும் இதுவரை நடாத்திச் செல்லப்படுகின்றமையால் இந்தத் தீர்மானம் புதிய பணிப்பாளர் சபையின் மூலம் மீண்டும் மீளாய்வு செய்து தீர்மானிக்கப்படும். | பணிப்பாளர் சபைத் தீர்மானத்தின் பிரகாரம் நட்டம் பெறுகின்ற விற்பனை நிலையங்களை மூடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

மில்லியன் மற்றும் ரூபா 0.82 மில்லியன் ஆக இருந்தது.

2023 ஆம் ஆண்டில் வரைவு மாதாந்த கணக்குகள் தயாரிக்காமையின் காரணமாக அந்த ஆண்டின் நட்டத்தை இனங்காண முடியாது இருந்தது.

2023 ஏப்ரல் 25 ஆம் திகதிய இலக்கம் 4.2/199 என்ற முகாமையாளர் - மனிதவள / பதிற்கடமை பொது முகாமையாளரின் கடிதத்தின் பிரகாரம் 2023.01.30 ஆந் திகதி நடைபெற்ற இலக்கம் 296 என்ற பணிப்பாளர் சபைக் கூட்டத்தின் போது தங்காலை மற்றும் குருநாகல் விற்பனை நிலையங்களை மூடிவிடுவதற்கு தீர்மானம் எடுக்கப்பட்டிருந்ததாக உரிய டிப்போ முகாமையாளர்களுக்கு அறிவிக்கப்பட்ட போதும் 2024 யூலை மாதத்தின் போது உரிய விற்பனை நிலையங்களுக்காக வாடகை செலுத்தப்பட்டிருந்தது.

## 2.10 நோக்கங்களுக்கு முரணான கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) **டைல் செயற்திட்டம்** | | |
| நாட்டில் அந்நிய செலாவணியின் நெருக்கடியின் காரணமாக இறக்குமதி வரையறுக்கப்பட்ட சந்தர்ப்பத்தில் சந்தையில் டைல் பற்றாக்குறையை குறைத்துக் கொள்ளும் நோக்கில் டைல் இறக்குமதி செய்யும் அனுமதி 2021 யூன் 11 ஆந் திகதிய இலக்கம் 2231/18 என்ற அதிவிசேட வர்த்தமானியில் கம்பனிக்கு மாத்திரம் வழங்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் கம்பனிக்கு இறக்குமதி நடவடிக்கைகளை மேற்கொள்ளக் கூடிய அளவில் நிதி வலு காணப்படாது இருந்தமையின் காரணமாக அந்த செயற்திட்டத்தில் | | |

| | | | |
|---|---|---|---|
| | ஈடுபட்டிருக்கின்ற அந்த பொருள் விற்பனைக்கு விருப்பம் தெரிவிக்கின்ற கம்பனியுடன் புரிந்துணர்வு உடன்படிக்கையில் கைச்சாத்திடல் "BMC" பெயரில் அவர்களின் பணத்தில் டைல் இறக்குமதி செய்து விற்பனை செய்து கிடைக்கின்ற இலாபத்தில் 1/3 கம்பனிக்கும் 2/3 நிறுவனத்திற்கும் பணம் ஈடுபடுத்துகின்ற கூட்டு முயற்சிக் கம்பனிக்கும் ஆக பகிர்ந்தளிப்பதற்கு இணக்கம் காணப்பட்டது. டைல் செயல் திட்டம் ஆரம்பத்தில் இருந்து 2023 யூன் 30 ஆம் திகதி வரையான காலத்தில் மேற்கொள்ளப்பட்ட டைல் இறக்குமதிகளின் பெறுமதி ரூபா 928.88 மில்லியன் ஆக இருந்ததுடன் விற்பனைப் பெறுமதி ரூபா 2,695.82 மில்லியன் ஆக இருந்தது. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன. | | |
| (i) | 2024 ஆகஸ்ட் 26 ஆம் திகதியில் உள்ளவாறு இறக்குமதி செய்யப்பட்ட டைல்களுக்காக கூட்டுத்தாபனத்திற்குக் கிடைக்க வேண்டிய இலாபப் பெறுமதி ரூபா 64.84 மில்லியன் மற்றும் இறக்குமதி செலவினம் கூட்டுத்தாபனத்தால் செலவிட்டதன் காரணமாக கூட்டுத்தாபனத்திற்கு அறவிட வேண்டிய ரூபா 22.92 மில்லியனும் உள்ளடக்கிய பெறவேண்டிய மொத்த பெறுமதி ரூபா 87.76 மில்லியன் ஆகும். அதற்காக வழங்குனர் செலுத்தாமல் நிறுத்தி வைத்துள்ள விற்பனைப் பெறுமதி ரூபா 36.37 மில்லியன் குறைக்கப்படும் இடத்து மேலும் அறவிட வேண்டிய மீதி ரூபா 51.38 மில்லியன் ஆகும். கூட்டுத்தாபனத்திற்குச் | டைல் செயல்திட்டத்தின் மூலம் அறவிட வேண்டிய மீதியில் ரூபா 22.92 மில்லியன் தொகை அந்நிய செலாவணி அனுப்பல் வேறுபாடாக இருந்ததுடன் அது கடந்த ஆண்டில் ஏற்பட்ட டொலர் நெருக்கடியின் காரணமாக ஏற்பட்ட பெறுமதியாகும். இதன் காரணமாக டைல்ஸ் செயற்திட்டத்தின் இலாப 30 சதவீதம் - 40 சதவீதம் வரை அதிகரிப்பதன் மூலம் ஒட்டுமொத்த இலாபம் ரூபா 174.90 மில்லியனால் அதிகரித்துள்ளது. அறவிட வேண்டிய இலாபப் பெறுமதியை அறவிடுவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்படும். | அறவிட வேண்டிய இலாபத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | சொந்தமான விற்பனை செய்யாமல் எஞ்சியுள்ள டையில் இருப்பின் பெறுமதி ரூபா 6.46 மில்லியன் மாத்திரம் ஆகும். | | |
| (ii) | "BMC" பெயரில் டைல் இறக்குமதி செய்யப்பட்ட போதும் கட்டளை இடப்படுகின்ற சகல கட்டளைகள் தொடர்பாகவும் கம்பனிக்கு அறிவித்திருக்க வில்லை. டெலிகிரபிக் டிரான்ஸ்பர் ஊடாக இறக்குமதிகளை மேற்கொள்வதற்கு உடன்படிக்கை செய்திருந்த போதிலும் அதற்கு முரணாக அவர்களின் கணக்கில் இருந்து பணம் செலுத்தி கம்பனி எந்த ஒரு அறிவித்தலும் இன்றி இறக்குமதி செய்திருந்த அமெரிக்க டொலர் 154,928.27 பெறுமதியான டைல்களின் இருப்பு துறைமுகத்தில் இருந்து விடுவித்துக் கொள்வதற்கு கம்பனி நடவடிக்கை எடுத்திருந்ததுடன் இதற்காக அந்நிய செலாவணி நாட்டில் இருந்து வெளிச் செல்வதற்கு இலங்கை மத்திய வங்கியில் இருந்து கிடைத்த அனுமதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | டைல் இறக்குமதி செய்கின்ற (தனியார்) கம்பனி மற்றும் வெளிநாட்டு டைல் வழங்குகின்ற தனியார் கம்பனிக்கிடையே காணப்படுகின்ற நீண்ட கால வியாபாரத் தொடர்பின் அடிப்படையில் EX21220636, EX21220637, EX21220680 மற்றும் EX21220681, SC 64 என்ற பட்டியல்களின் டொலர் பெறுமதி 154,928.27 தொகை வழங்குனர் கம்பனியால் செலுத்துதல் நிராகரிக்கப்பட்டமைக்கு கம்பனிக்கு எழுத்துமூலம் அறிவிக்கப்பட்டதுடன் பின்னைய காலத்தில் இலங்கை மத்திய வங்கிலிருந்து அல்லது சட்டரீதியான பிரச்சினைகள் ஏற்படுமாயின் அது தொடர்பான சகல பொறுப்புக்களும் டைல் இறக்குமதி செய்கின்ற தனியார் கம்பனியால் ஏற்றுக்கொண்டமைக்கான சத்தியப் பிரமாண பத்திரம் கையளிக்கப்பட்டமை வெளிப்படுத்தப்பட்டிருந்தது. | வர்த்தமானியின் நோக்கங்களுக்கு இணங்க செயற்படுகின்றமையை கம்பனியின் முகாமைத்துவதத்தால் உறுதிப்படுத்துதல் வேண்டும். |
| (iii) | அந்நிய செலாவணி ஒதுக்க பற்றாக்குறையின் காரணமாக 2023 சனவரி 01 ஆம் திகதிய இலக்கம் 2312/78 என்ற அதிவிசேட வர்த்தமானியில் செரமிக் டைல் இறக்குமதி மீண்டும் கைவிடப்பட்டிருக்கும் போது கம்பனியால் அது தொடர்பாக கவனத்தில் கொள்ளாமல் தனியார் வீடமைப்பு செயற்திட்டத்திற்காக டைல் இறக்குமதி செய்த கம்பனிக்கும், தனியார் கட்டிடம் ஒன்றின் முதலாவது மாடி நவீன மயப்படுத்துவதற்காக டைல் இறக்குமதி செய்த | BMC டைல் செயற்திட்டத்திற்கு உரித்தான வர்த்தமானி அறிவித்தலில் எழுந்த பிரச்சினையான நிலைமையின் காரணமாக 2023.05.16 ஆந் திகதி இறக்குமதி செய்யப்பட்ட டைல் இருப்பை துறைமுகத்தில் இருந்து விடுவித்துக் கொள்வதற்கு ஒரு மாதத்திற்கு மேற்பட்ட கால தாமதம் ஏற்பட்டமையால் லென்றோ இம்பெக்ஸ் நிறுவனத்திற்கு செலவிட வேண்டியிருந்த தாமதக் கட்டணத்தின் அளவு அதிகரித்தன் அடிப்படையில் நிதி ரீதியான பாதிப்பான | வர்த்தமானி பத்திரத்தின் நிபந்தனைகளுக்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | கம்பனிக்கும் அனுமதி வழங்கப்பட்டிருந்தது. மேலும் அந்த நிறுவனத்தால் இறக்குமதி செய்யப்பட்ட டைல் இருப்பில் 1500 டைல்களின் அளவு 2023 யூலை 06 ஆந் திகதி கம்பனிக்கு எந்த ஒரு இலாபமோ அல்லது வரித் தொகையோ அறவிடாமல் விடுவிப்பதற்கு பொது முகாமையாளரின் அங்கீகாரத்தில் இடமளிக்கப்பட்டிருந்தது. | நிலைமைக்கு முகங்கொடுத்திருந்தமையைக் காண்பித்து மற்றும் உடன்படிக்கையின் பிரகாரம் கம்பனியின் இலாபப் பங்கு மற்றும் அவர்களுக்கு உரிய வரித் தொகை முதலாவது வழங்க முடியாதிருந்ததாகவும் அதனை அடுத்து வரும் விற்பனை வருமானத்தின் போது வழங்கப்படுவதாகவும் எழுத்து மூலம் உத்தரவாதம் அளித்து அந்த கோரிக்கையினைக் கவனத்தில் கொண்டும் மற்றும் லென்ரோ இம்பெக்ஸ் நிறுவனம் கொள்வனவு செய்த டைல் இருப்பில் 5860 டைல் இருப்பு விற்பனைக்காக எஞ்சியிருந்தமையால் 1500 டைல் அளவிற்கான விற்பனை வருமானம் அவர்களுக்கு வழங்குவதற்கு இடமளிக்கப்பட்டிருந்தது. | |
| (iv) | உடன்படிக்கையின் பிரகாரம் பொருட்கள் விடுவிக்கப்பட்ட பின்னர் முதலாவது பகுதி கூட்டுத்தாபனத்தின் இலாப பங்காக வழங்குனரால் கூட்டுத்தாபனத்திற்கு செலுத்த வேண்டியிருந்த போதிலும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்காமையினால் கணக்காய்வுத் திகதியான 2024 ஆகஸ்ட் 16 வரையிலும் கூட்டுத்தாபனத்திற்கு கிடைக்க வேண்டிய இலாபப் பங்கு ரூபா 3.41 மில்லியன் ஆக இருந்ததுடன் கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமாக உள்ள ஹோல்டிங்ஸ் ஸ்டைல் இருப்பு பெறுமதி ரூபா 2.18 மில்லியன் ஆகும். அதற்கு மேலதிகமாக வழங்குனரின் இறக்குமதி செலவினமும் கூட்டுத்தாபனத்தால் செய்யப்பட்டதன் காரணமாக கூட்டுத்தாபனத்திற்கு அறவிட வேண்டிய ரூபா 5.10 மில்லியனையும் உள்ளடக்கிய பெறவேண்டிய மொத்த தொகை ரூபா 8.51 மில்லியன் ஆகக் காணப்படும் போது | வின் ஹோல்டிங்ஸ் நிறுவனத்தில் இருந்து கம்பனிக்கு மேலும் அறவிட வேண்டிய பெறுமதி ரூபா 6.99 மில்லியன் ஆக இருந்ததுடன் அதில் ரூபா 5.10 மில்லியன் வெளிநாட்டு பணம் அனுப்பல் வேறுபாடாக இருந்ததுடன் இலாப சதவீதம் 30 சதவீதம் - 45 சதவீதம் வரை அதிகரித்ததன் மூலம் வின் ஹோல்டிங்ஸ் இல் இருந்து ரூபா 11.01 மில்லியன் மேலதிக இலாபம் உருவாகி இருந்தது அறியப்பட்டுள்ளது.<br><br>அந்த தொகை தவிர மேலும் கம்பனிக்கு ரூபா 1.89 மில்லியன் அறவிட வேண்டியிருந்தது. வின் ஹோல்டிங்ஸ் கம்பனியின் இருப்பு பெறுமதி ரூபா 2.18 மில்லியன் ஆக இருந்ததுடன் அவர்களிடமிருந்து அறவிட வேண்டியதாக காணப்படுகின்ற ரூபா 5.10 மில்லியன் அந்நிய செலாவணி அனுப்பல் வேறுபாடு தொடர்பாக இன்னும் இறுதித் தீர்மானத்திற்கு வர முடியாதிருந்தமை | அறவிடவேண்டிய பெறுமதிகளில் உள்ளடக்கப்பட்ட அந்நிய செலாவணி அனுப்பல் வேறுபாடு தொடர்பாக விரைவாக தீர்மானத்தைப் பெற்று அறவிட வேண்டிய பெறுமதி அறவிடப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | வழங்குனருக்கு செலுத்தாமல் நிறுத்தி வைக்கப்பட்ட ரூபா 5.01 மில்லியன் கம்பனிக் பெற வேண்டிய இலாபப் பங்கிற்காக ஈடுசெய்யப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் 2023.07.13 இல் உள்ளவாறு கூட்டுத்தாபன அறிக்கைகளில் காண்பிக்கப்பட்ட ரூபா 6.53 மில்லியன் நிறுத்தி வைக்கப்பட்ட பெறுமதி ரூபா 1.52 மில்லியன் வரை குறைக்கப்பட்டுள்ளது. | வெளிப்படுத்தப்பட்டது. | |
| (ஆ) | **மாதிரிக் கிராம நிகழ்சித் திட்டத்திற்காக கட்டிட பொருள் கூட்டுத்தாபனத்தில் இருந்து பொருட்கள் விநியோகித்தல்.**<br><br>2015 முதல் 2021 ஆம் ஆண்டு வரையான 07 காலப் பகுதியில் தேசிய வீடமைப்பு அதிகார சபையின் மூலம் அமுல்படுத்தப்பட்ட சூரிய பொக்குன பெபொக்காவ வீடமைப்புத் திட்டத்தின் வீட்டு உரிமையாளர்களுக்கு தேவையான கட்டிட பொருட்கள் கடன் அடிப்படையில் கூட்டுத்தாபனத்தில் இருந்து விநியோகிக்கப்பட்டிருந்தது. கூட்டுத்தாபனத்திற்குரிய அம்பலாங்கொடை, தங்காலை, லுணுகம்வெஹர, திஸ்ஸ, வீரகெட்டி, எம்பிலிப்பிட்டி, சூரியவெவ என்ற கிளைக் களஞ்சியத்தில் இருந்து ரூபா 34.69 மில்லியன் பெறுமதியான கட்டிடப் பொருட்கள் வரையறை இன்றி விநியோகிக்கப்பட்டிருந்தது. 2024 ஆகஸ்ட் 30 ஆந் திகதி வரையில் மேலும் தீர்த்து வைக்கப்படாத கடன் மீதி ரூபா 26.59 மில்லியன் ஆக இருந்ததுடன் ஒரு உத்தியோகத்தரிடம் இருந்து பெயரில் ரூபா 10 மில்லியனை விஞ்சிய பொருட்கள் விநியோகிக்கப்பட்ட சந்தர்ப்பம் காணப்பட்டது. | சரி செய்யப்பட்டதன் பின்னர் ஆன மீதி ரூபா 26.72 மில்லியன் ஆகும். அதில் ரூபா 0.12 மில்லியன் தொகை தற்போது சேகரிக்கப்பட்டுள்ளது. | கம்பனியின் வியாபார நோக்கங்களை நிறைவேற்றக் கூடிய வகையில் கம்பனியின் முகாமைத்துவம் செயற்படுதல் வேண்டும். |

## 2.11 செயலாற்றல்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 1970 இன் 33 ஆம் இலக்க இலங்கை அரச வணிக கூட்டுத்தாபன சட்டத்தின் கீழ் 1971 ஆம் ஆண்டின் போது ஸ்தாபிக்கப்பட்ட வரையறுக்கப்பட்ட கட்டிடப் பொருட்கள் கூட்டுத்தாபனம் 1992 ஆம் ஆண்டின் போது 1982 இன் 17 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் கீழும், 2010 ஆம் ஆண்டின் போது 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்திக் கீழும் மீண்டும் பதிவு செய்யப்பட்டிருந்துடன் அதன் கீழ் தூர நோக்கு ''நியமத்திற்கு இணங்க உயர் தரத்தை உடைய கட்டிடப் பொருட்கள் மற்றும் உபகரணங்களை போட்டி விலையில் நாடு முழுவதும் வழங்குவதற்கு முன்னுரிமையளித்தல் மற்றும் அரச நிறுவனம் ஒன்றாக சமூக பொறுப்புக்களை நிறைவேற்றி இலங்கை மக்களுக்கு ஆகக் கூடிய நம்பிக்கை ஒன்றை கட்டி எழுப்புதல்'' ஆகும். எனினும் தற்போது வரையிலும் கம்பனி வரையறுக்கப்பட்ட வியாபார நடவடிக்கைகள் மாத்திரம் ஈடுபட்டிருந்தது.<br><br>கம்பனியின் நவீனமயப்படுத்தப்பட்ட பிரதான கண்காட்சிக் கூடத்தில் தனியார் கட்டிடப் பொருட்கள் மற்றும் உபகரணங்கள் வழங்குனர்களின் விற்பனை கொட்டகைகள் காட்சிப்படுத்தப்பட்டதுடன் அவர்களின் பொருட்கள் மற்றும் உபகரணங்கள் கொள்வனவு செய்து இலாப எல்லையில் விற்பனை, கம்பனியின் கிளை அலுவலகம் மூலம் பிரதான அலுவலகத்தில் இருந்து அனுப்படுகின்ற சீமெந்து, சீட் மற்றும் இரும்பு குறித்துரைத்த விலையில் விற்பனை செய்தல், கண்காட்சிக் கூடத்தில் காணப்படாத பொருட்கள் வெளிவியாபாரிகளிடம் இருந்து கொள்வனவு செய்து இலாப எல்லையில் விற்பனை செய்தல், கட்டடப் பொருட்கள் கூட்டுத்தாபனத்தின் பெயரில் வேறு நிறுவனங்களினால் இறக்குமதி செய்யப்பட்ட டைல் விற்பனை செய்தல் போன்ற வியாபார நடவடிக்கைகளின் மூலம் கம்பனி ஸ்தாபிக்கப்பட்டதன் நோக்கத்தின் பிரதான பணி அந்த முறையில் நிறைவேற்றப்படாது இருந்தமையால் கம்பனியின் தூர நோக்கு இதன் மூலம் வெளிப்படுத்தப்படவில்லை. | நிறுவனத்தில் காணப்படுகின்ற சீரற்ற நிதி நிலமையின் காரணமாக தற்போது மேற்கொள்ளப்படுகின்ற வியாபார உத்திகளை விரைவாக மாற்றுவதன் மூலம் மிகவும் பாதகமான நிலைமைக்கு முகங்கொடுக்க வேண்டி உள்ளது. அதனால் படிப்படியாக முறையான வியாபார உத்திகளை அகற்றுவதன் மூலம் நிறுவனத்தின் எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்கள் (mission) இலக்குகளுக்கு நுழைவதற்கான திட்டங்கள் மேற்கொள்ளப்படுகின்றது. | கம்பனியின் நோக்கம் மற்றும் தூர நோக்குகளின் பிரகாரம் செயற்திறனாகவும் வினைத்திறனாகவும் செயற்பாடுகளை முகாமைத்துவம் செய்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும். |

**2.12 இனங்காணப்பட்ட நட்டம்**

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2023 யூன் 30 ஆம் திகதி வரையில் கம்பனிக்கு எதிராக நீதிமன்றத்தில் 08 வழக்குகள் விசாரணையில் காணப்பட்ட போதும் இதுவரையில் 02 வழக்குகள் தவிர ஏனைய வழக்குகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. அந்த 02 வழக்குகளுக்காக நீதிமன்ற கட்டளையின் அடிப்படையில் கம்பனியால் செலுத்த வேண்டிய ரூபா 8.48 மில்லியன் தொகை உரிய தரப்பினருக்கு மேலும் செலுத்த வேண்டி இருந்தது. | தற்போது காணப்படுகின்ற 02 வழக்குகள் பின்வருமாறு.<br><br>• MC 6785/17 EPF - ரூபா 3.98 மில்லியன் தொகை செலுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டதுடன் மாதாந்தம் ரூபா 50,000 வீதம் செலுத்தி 2022.12.29 இல் உள்ளவாறு மேலும் ரூபா 1.13 மில்லியன் (23 தவணைகள்) தொகை செலுத்துவதற்கு எஞ்சியுள்ளது.<br><br>• HC(Civil) 316/2003(1) - ஒவ்வொரு மாதமும் ரூபா 100,000 வீதம் ஒட்டுமொத்த நிபந்தனையின் பிரகாரம் செலுத்தப்பட்டு முன்கொண்டு வரப்பட்ட ரூபா 7.36 மில்லியன் (74 தவணைகள்) செலுத்த வேண்டி இருந்தது. | கம்பனிக்கு எதிராக வழக்கு நடவடிக்கைகளைக் குறைக்கும் வகையில் நிறுவனத்தின் செயற்பாட்டு நடவடிக்கைகளை முகாமைத்துவம் செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | உள்நாட்டுத் தேவைகளுக்காக சீமெந்து இறக்குமதி செய்வதற்காக சீமெந்துக் கம்பனியில் இருந்து கூறுவிலைகள் கோரப்பட்டதுடன் கிலோகிராம் 50 “BMC” பெயரில் அச்சிடப்பட்ட கடதாசி உறைகளில் மெற்றிரிக் தொன் 1 அமெரிக்க டொலர் 79.50 வீதம் ஆன சீமெந்து மெற்றிக்தொன் 5600 வழங்குவதற்காக உரிய பிரகாரம் பெறுகை | நிறுவனத்தின் மூலம் செயற்திட்டத்தின் நடவடிக்கைகளை அமுல்படுத்தாமையினால் இந்த வைப்பினை மீண்டும் பெற்றுக் கொள்ளல் வழங்குனரால் நிராகரிக்கப்பட்டிருந்தது. இது தொடர்பாக மிகுதி நடவடிக்கைகளை எடுப்பதற்கு நிறுவனத்தின் சட்டப் பிரிவின் மூலம் காண்பிக்கப்பட்ட | பொது ஆதன சட்டத்தின் கீழ் நிறுவனத்திற்கு ஏற்பட்ட நட்டத்திற்காக பொறுப்பு வாய்ந்த தரப்பினரிடம் இருந்து நட்டத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

நடைமுறைகள் பின்பற்றாமல் தனியார் கம்பனி ஒன்று தெரிவு செய்யப்பட்டிருந்தது. இராஜாங்க அமைச்சின் மேலதிக செயலாளர் (நிர்மாணம்) இனால் 2022 பெப்ரவரி 24 ஆந் திகதி இலக்கம் 7/2/2/651 என்ற கடிதத்தில் உடன்படிக்கை செய்யப்பட்டதாகவும் அதற்காக முற்பணமாக ரூபா 05 மில்லியன் செலுத்துமாறு வழங்கப்பட்ட ஆலோசனையின் அடிப்படையில் 2022 மார்ச் 14 ஆந் திகதி முன்னாள் இருந்த தலைவரினால் உடன்படிக்கை செய்து முன் உறுதிப்படுத்தல் இன்றி நடவடிக்கை எடுக்கப்பட்டதன் காரணமாக சீமெந்து இறக்குமதிக்காக செலுத்தப்பட்ட ரூபா 05 மில்லியன் முற்பணத் தொகையை மீண்டும் அறவிடுவதற்கு முடியாமல் இருந்தது.

இந்தப் பிரச்சனைகள் தொடர்பாக ஆரம்ப விசாரணைகள் மேற்கொள்வதற்கு மற்றும் வீடமைப்பு அமைச்சின் செயலாளரின் கோரிக்கையின் அடிப்படையில் அரச நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண உள்ளூராட்சி அமைச்சின் புலனாய்வு உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டிருந்தனர். இறக்குமதி நடவடிக்கைகளின் போது கம்பனிக்கு ஏற்பட்ட நட்டம் தொடர்பாக பொறுப்பு வாய்ந்த மேற்கூறப்பட்ட உடன்படிக்கை கைச்சாத்திட்ட ஊழியர்களை அகற்றி உத்தியோகத்தர்களுக்கு எதிராக பொது ஆதன சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுத்து அந்த நட்டத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு பரிந்துரை செய்யப்பட்டிருந்த போதிலும் அந்த பரிந்துரையும் அமுல்படுத்துவதற்கு இதுவரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

விடயங்களின் பிரகாரம் முதன்மையாக மோசடி விசாரணைப் பிரிவிற்கு / குற்றப்புலனாய்வு திணைக்களத்திற்கு அல்லது ஊழல் மோசடி விசாரணைப் பிரிவிற்கு முறைப்பாடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

**2.13 சொத்துக்கள் முகாமைத்துவம்**

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2005 யூலை 19 மற்றும் 2006 ஒக்தோபர் 03 ஆம் திகதிய அமைச்சரவை அங்கீகாரத்தின் அடிப்படையில் கொழும்பு 10, ஸ்ரீ சங்கராஜ மாவத்தையில் அமைந்துள்ள இலக்கம் 541 இல் இலக்கம் 1762 என்ற நில வரைபட கூறு இலக்கம் A மற்றும் B என்ற 03 றூட் 3.2 பேர்ச் மற்றும் இலக்கம் 5107 நிலை வரைபடத்தின் லொட் இலக்கம் A இன் பேர்ச் 15 மற்றும் இலக்கம் 4365 நில வரைபடத்தின் லொட் இலக்கம் 01 இன் அளவில் 01 றூட் 13.20 பேர்ச் அளவு கம்பனியால் ஆதன வியாபார கம்பனிக்கு ரூபா 222.50 மில்லியனுக்கு விற்பனை செய்யப்பட்டிருந்தது.<br><br>எனினும் 1964 இன் 28 ஆம் இலக்க காணி சுவீகரித்தல் சட்டத்தின் பிரகாரம் இந்தக் கம்பனிக்கு கையளிக்கும் இலக்கம் 1/146 என்ற உறுதிப்படுத்தல் பத்திரத்தில் இரண்டாவது பட்டோலையில் காண்பிக்கப்படுகின்ற நிபந்தனை மற்றும் வரையறையின் பிரகாரம் இந்த காணி உரிய அமைச்சில் உரிய அனுமதி இன்றி கைப்பற்றிய பணிகள் தவிர ஏனைய பணிகளுக்காக ஈடுபடுத்த முடியாதிருந்தமை குறிப்பிடப்பட்ட போதிலும் அதற்கு முரணாக உரிய காணிக் கூறு விற்பனை செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.<br><br>இந்த ஆதனங்களை தீர்த்து உரித்தை பெற்றுக் கொள்வதற்காக கம்பனிக்கு எதிராக அந்த ஆதன வியாபாரக் கம்பனியால் 2007 செப்தெம்பர் மாதம் 04 ஆந் திகதி கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில் வழக்கு இலக்கம் 25514/L இன் கீழ் வழக்கு | உரிய காணி 2022 நவம்பர் மாதம் நீதிமன்றக் கட்டளையின் அடிப்படையில் உரித்து HDFC வங்கிக்கு வழங்கப்பட்டுள்ளது.<br><br>உரிய அமைச்சின் சரியான அனுமதி இன்றி நிறுவனத்திற்குச் சொந்தமான காணிகளை விற்பதற்கு பணிப்பாளர் சபையின் தீர்மானம் எதிர்காலத்தில் எடுக்கப்படுவதில்லை. | முறையான அங்கீகாரம் இன்றி மற்றும் நோக்கத்திற்கு புறம்பாக கையளிக்கப்பட்ட காணியை விற்பனை செய்ய முடியாதிருந்ததுடன் கம்பனிக் சொந்தமான சொத்துக்களை உரிய பிரகாரம் முகாமைத்துவம் செய்வதை கவனத்தில் கொள்ளல் வேண்டும். |

ஒன்று தொடரப்பட்டிருந்ததுடன் 2012 சனவரி 10 ஆந் திகதி கம்பனியால் ரூபா 359.32 மில்லியன் தொகை ஒன்று மேற்கூறப்பட்ட நிறுவனத்திற்கு 2012 சனவரி 31 ஆந் திகதிக்கு முன் செலுத்தி காணிகளின் உரித்தை மீண்டும் கையேற்பதற்கு இணங்கியதன் அடிப்படையில் வழக்கு சமரசத்திற்கு கொண்டு வரப்பட்டது. எனினும் இணங்கப்பட்ட பிரகாரம் உரிய பணம் கம்பனியினால் செலுத்தாமையினால் காணிகளின் தீர்த்தல் உறுதியைப் பெற்றுக் கொள்வதற்கு ஆதன வியாபாரக் கம்பனி இதுவரை தற்போது நடவடிக்கை எடுத்திருந்தது.

(ஆ) 1998 நவம்பர் 09 ஆந் திகதிய இலக்கம் 541 ஸ்ரீ சங்கராஜ மாவத்தை, கொழும்பு 10 இல் அமைந்துள்ள கம்பனிக்குச் சொந்தமான காணியில் 100 பேர்ச் காணி அளவு இலங்கை வங்கிக்கு ரூபா 70 மில்லியன் தொகையில் விற்பனை பிணையின் மூலம் கையளிக்கப்பட்டதுடன் பின்னர் கம்பனியால் 2018 ஒக்தோபர் மாதம் 23 ஆம் திகதி இலங்கை வங்கியில் இருந்து பெறப்பட்ட ரூபா 500 மில்லியன் கடன் தொகையில் மேற்கூறப்பட்ட விற்பனைக் குரிய தொகையான ரூபா 70 மில்லியன் தொகையுடன் கடன் மேலதிகப் பற்றுத் தொகையும் அதன் பிரகாரம் செலுத்த வேண்டிய வட்டியையும் உள்ளடக்கு ரூபா 199.05 மில்லியன் தொகை ஈடுசெய்யப்பட்டிருந்தது. இலங்கை வங்கி மேற்குறிப்பிடப்பட்ட பணத்தை ஈடு செய்த பின்னர் வங்கியினால் தயாரிக்கப்பட்டு அனுப்பபட்டிருந்த உரித்துறுதியின் பெறுமதிக்கு உரிய முத்திரைக் கட்டணமான ரூபா 18.39 மில்லியன் தொகை செலுத்தி மீண்டும் காணி கையேற்க வேண்டியிருந்த போதிலும் 2023 திசெம்பர் 31 முத்திரைக் கட்டணமான ரூபா 5.38 மில்லியன் தொகை தொடர்பாக உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் மூலம் விசாரணை ஒன்று நடத்துமாறு இலங்கை வங்கி அறிவித்த பின்னர் விசாரணையின் போது மதிப்பீட்டு முத்திரைக் கட்டணம் ரூபா 18.39 மில்லியன் ஆக அறிவிக்கப்பட்டிருந்தது. அதனைக் குறைத்துக் கொள்வதற்கு மாகாண இறைவரித் திணைக்களத்திற்கு மீண்டும் கோரிக்கை விடப்பட்டுள்ளது.

உரிய முத்திரைக் கட்டணத்தை சரியான பிரகாரம் செலுத்தி காணியின் உரித்தைக் கையேற்பதற்கு முகாமைத்துவம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

| | | | |
|---|---|---|---|
| | ஆந் திகதி வரையிலும் கையேற்கப்பட்டிருக்க வில்லை. | | |
| (இ) | கம்பனியின் கீழ் உள்ள 03 ஏக்கர் 3.5 றூட் 17 பேர்ச் பெறுமதியான அளவான மொரட்டுவ, அநுராதபுரம், அம்பாறையில் அமைந்துள்ள காணிகளுக்காக உரித்துறுதியைப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | உரித்துறுதியைப் பெற்றுக் கொள்வதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்படும். | உரித்துறுதி தயாரித்து பதிவு செய்து கொள்வதற்கு உரிய நிறுவனங்களுடன் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | கம்பனிக்குச் சொந்தமான குன்குனியார் உப்புக்குளம் கரை யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள 01 றூட் 31.6 பேர்ச் அளவான காணி மற்றும் நுவரெலியா மற்றும் பம்பரகெலே கட்டிடம் மற்றும் எம்பிலிப்பிட்டி யோதகம 02 வீடுகள் என்பன 2017 ஆம் ஆண்டு முதல் பயன்படுத்தப்படாமல் விளைவற்றுக் காணப்பட்டது. | பயன்படுத்துவதற்காக ஈடுபடுத்துவதற்கு ஆரம்ப அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக பரிந்துரை செய்யப்பட்ட போதும் இதுவரையில் நிறுவனத்தின் நிதி வசதிகள் காணப்படாமை காரணமாக தற்காலிகமாக அபிவிருத்தி நடவடிக்கைகள் நிறுத்தப்பட்டுள்ளது. | காணப்படுகின்ற வளங்களை செயற்திறனாக பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (உ) | மகாவலி அதிகார சபையினால் 50 வருடங்கள் குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ள எம்லிப்பிட்டியில் 01 றூட் காணிக்காக 1997 ஆம் ஆண்டு முதல் 2022 திசெம்பர் 31 ஆந் திகதி வரை நிலுவை வரித் தொகை மற்றும் தண்டப்பணம் ரூபா 1.65 மில்லியன் ஆகக் காணப்பட்டது. இந்த வாடகைப் பணம் செலுத்தாமையின் காரணமாக குத்தகை முடிவுறுத்த வேண்டியிருந்த போதும் சட்ட ரீதியான நடவடிக்கைகளை எடுப்பதற்காக மகாவலி அதிகார சபைக்கு அறிவிக்கப்பட்டிருந்தது. | பகுதி பகுதியாக நிலுவை வாடகை செலுத்துவதற்காக நடவடிக்கை எடுக்கப்படும். | நிலுவை வாடகையை உள்ளடக்கிய வாடகையை உரிய பிரகாரம் செலுத்துவதற்கும் அந்தக் காணியைப் பயன்படுத்துவதன் மூலம் வருமானத்தை உழைப்பதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஊ) | தேசிய லொத்தர் சபையில் சேவை நடவடிக்கைகளுக்காக இலக்கம் 541 ஸ்ரீ சங்கராஜ மாவத்தையில் அமைந்துள்ள கம்பனியின் கட்டிடத்தில் இலக்கம் 07 என்ற களஞ்சியம் 2017 செப்தெம்பர் 01 ஆந் திகதி முதல் சதுர அடி 1,513 ஒரு சதுர அடி ரூபா 55 வீதம் | 2018 முதல் 2021 வரையான காலத்தில் எங்களுக்கு அறவிட வேண்டியிருந்த ரூபா 60,382 தொகை தொடர்பாக எங்களால் அந்த நிறுவனத்திற்கு அறிவிக்கப்பட்ட போதும் உடன்படிக்கை | சொத்துக்களை மதிப்பீடு செய்து அதன் பிரகாரம் வாடகை அளவை நாளது வரையாக்கி முறையான உடன்படிக்கையின் கீழ் களஞ்சியங்கள் வாடகைக்கு வழங்கப்படல் வேண்டும். |

| | |
|---|---|
| மாதாந்தம் ரூபா 83,215 தொகைக்கும், இலக்கம் 05 மற்றும் 06 களஞ்சிய 2016 ஒக்தோபர் 01 ஆந் திகதி முதல் சதுர அடி ஒன்று ரூபா 55 வீதம் சதுர அடி 1,568 இற்கு மாதாந்தம் ரூபா 86,240 தொகையும், இலக்கம் 01, 02, 03, 04 என்ற களஞ்சியங்கள் 2015 மே 27 முதல் சதுர அடி ஒன்று ரூபா 55 வீதம் சதுர அடி 3,136 இற்கு மாதாந்தம் ரூபா 172,480 தொகைக்கும் வழங்கப்பட்டிருந்ததுடன் உடன்படிக்கை புதுப்பிக்காமல் 2015, 2016, 2017 ஆம் ஆண்டுகளின் விலைக்கே 2020 ஆம் ஆண்டிலும் அந்தக் களஞ்சியங்கள் வாடகைக்கு வழங்கப்பட்டிருந்தது. இந்தக் களஞ்சியத்திற்காக 2018 யூலை 2021 சனவரி வரை செலுத்த வேண்டிய ரூபா 60,382 ஆன மின்சாரப் பட்டியல் தேசிய லொத்தர் சபையினால் செலுத்தப்படாது இருந்ததுடன் 2021 திசெம்பர் 31 ஆந் திகதி களஞ்சியம் மீள கைளிக்கப்பட்டிருந்தது. | செய்யப்படாமையினால் அந்த தொகையை செலுத்த முடியாதிருந்ததாக தேசிய லொத்தர் சபை பணிப்பாளரால் எங்களுக்கு அறிவிக்கப்பட்டிருந்தது.<br><br>குறித்துரைத்த உடன்படிக்கை காணப்படாமல் நிறுவனத்தின் கட்டிடங்களை வாடகைக்கு வழங்குதல் எதிர்காலத்தில் மேற்கொள்ளாமல் இருப்பதற்கு கவனத்தில் கொள்ளப்படும். |

## 2.14 நிதி முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கம்பனியால் 10 வங்கிக் கணக்குகள் பேணிச் செல்லப்படுவதுடன் 2023 ஆம் ஆண்டிற்காக ஆரம்ப மற்றும் இறுதி மீதிகள் குறிப்பிட்டு காசேடுகள் எதுவும் பேணிச் செல்லப்படாது இருந்ததுடன் வங்கிக் கணக்கிணக்கக் கூற்றும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. அந்த வங்கிக் கணக்கு மீதிகளின் உறுதிப்படுத்தலின் பிரகாரம் 03 வங்கிகளின் வரவு மீதி ரூபா 33.49 மில்லியனாக இருந்ததுடன் 07 கணக்குகளில் செலவு மீதி ரூபா 51.34 மில்லியன் ஆகும். இதன் காரணமாக கம்பனியில் போதியளவான பிரகாரம் நிதிக் கட்டுப்பாடு அமுல்படுத்தப்பட்டிருக்க வில்லை. | 02 நடைமுறைக் கணக்குகளுக்காக 2022 ஆம் ஆண்டிற்காகவும் காசேடு மற்றும் வங்கி இணக்கக் கூற்று தயாரிக்கப்பட்டுள்ளதுடன் சேமிப்புக் கணக்குகளுக்காக 2022 செப்தெம்பர் மாதம் வரை காசேடு தயாரிக்கப்பட்டுள்ளது.<br><br>2023 ஆம் ஆண்டிற்காக காசேடு தயாரிக்கப்பட்டுள்ளது. அதற்குரிய வங்கி இணக்கக் கூற்று தயாரிக்கப்படவில்லை. | மிகவும் சரியாக கணிப்பீடு செய்யப்பட்ட ஆரம்ப மீதியை அடிப்படையாகக் கொண்டு காசேடு மற்றும் வங்கி இணக்கக் கூற்று மாதாந்தம் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுப்பதற்கு முகாமைத்துவம் கவனத்தில் கொள்ள வேண்டியதுடன் அது முகாமைத்துவம் தொடர்பாக அவர்களின் பொறுப்பும் ஆகும். |

| | | | |
|---|---|---|---|
| | | 2024 ஆம் ஆண்டில் சகல நடைமுறைக் கணக்குகளுக்காகவும் காசேடு தயாரிக்கப்பட்டுள்ளதுடன் வங்கி இணக்கக் கூற்று தயாரிப்பதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | |

**3. மனிதவள முகாமைத்துவம்**

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2021 நவம்பர் 16 ஆந் திகதிய இலக்கம் 01/2021 என்ற பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் கைநூலின் கீழே குறிப்பிடப்படுகின்ற பிரிவுகளின் பிரகாரம் நிறுவனம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | சுற்றறிக்கையின் பிரிவுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுப்பதற்கு தற்போது அனுப்பப்பட்டுள்ளது. | சுற்றறிக்கை ஆலோசனையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (i) | 3.3 (i) பந்தியின் பிரகாரம் பதவியணியினர் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகரித்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | | |
| (ii) | 3.2 (i) பந்தியின் பிரகாரம் பெறவேண்டிய உரிய அங்கீகாரத்தைப் பெற்று ஆட்சேர்ப்பு நடைமுறை ஒன்று கம்பனியிடம் காணப்படவில்லை. | | |
| (ஆ) | வரையறுக்கப்பட்ட கட்டிட பொருட்கள் கூட்டுத்தாபனத்தின் மொத்த மூலதனம் பொதுத் திறைசேரியால் ஈடுபடுத்தப்பட்டுள்ளதுடன் 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட கம்பனியாகும். அதன் அமைப்பு அகவிதிகளில் 78 ஆவது பிரிவின் பிரகாரம் நிதி அமைச்சர் மற்றும் வீடமைப்பு, நிர்மான அமைச்சரிடம் விசாரணை செய்து திறைசேரி செயலாளரினால் கம்பனியின் பணிப்பாளர் சபை நியமிக்க வேண்டியிரந்த போதிலும் பணிப்பாளர் சபை நியமித்தல் | தற்போதைய தலைவர் பதவி திறைசேரி செயலாளரினாலேயே வழங்கப்பட்டுள்ளது. ஏனைய பணிப்பாளர் சபை அங்கத்தவர்கள் நியமிக்கப்பட உள்ளனர். | கம்பனிச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் பணிப்பாளர் சபை நியமிக்கப்படல் வேண்டும். |

கடிதம் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சரின் அங்கீகாரத்தின் அடிப்படையில் அமைச்சின் செயலாளரினால் விநியோகிக்கப்பட்டிருந்தது.

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 கூட்டிணைந்த திட்டம் / செயல் நடவடிக்கைத் திட்டம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2021 நவம்பர் 16 ஆந் திகதிய பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் வழிகாட்டிக் கோவையின் 2.3 ஆம் பிரிவின் பிரகாரம் கம்பனியின் தொலைநோக்கு மற்றும் செயற்பணிகளை நிறைவேற்றுவதற்காக 03 வருடங்களுக்குக் குறையாத காலத்திற்காக கூட்டிணைந்த திட்டம் மற்றும் அதற்கு நேரொத்த செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரித்து நிதியாண்டு ஆரம்பிப்பதற்கு 15 நாட்களுக்கு முன் உரிய திட்டத்திற்காக பணிப்பாளர் சபை அங்கீகாரம் பெற வேண்டியிருந்த போதிலும் அவ்வாறு பெறப்பட்டிருக்கவில்லை. வழிகாட்டியின் பிரகாரம் கம்பனியின் செயலாற்றல் தொடர்பாக உறுதிப்படுத்தலைப் பெற்று தேவையான சந்தர்ப்பங்களின் போது பொதுத் திறைசேரியுடன் அந்த பிரச்சனையான நிலைமைகள் தொடர்பாக கலந்துரையாடுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | 2023.10.11 ஆந் திகதி 2024 முதல் 2026 ஆம் ஆண்டு வரை கூட்டிணைந்த திட்டம் மற்றும் அதற்கு நேரொத்த செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரித்து வரிசை அமைச்சிற்கு கையளிக்கப்பட்டுள்ளது. | சுற்றறிக்கை ஆலோசனையின் பிரகாரம் கூட்டிணைந்த திட்டம் மற்றும் வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிப்பதற்கு முகாமைத்துவத்தால் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 4.2 பொதுமுயற்சிகள் குழுவின் பரிந்துரைகள் அமுல்படுத்தப்படாமை

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2022 ஏப்ரல் 19 ஆம் திகதி நடைபெற்ற பொது முயற்சிகள் குழுவின் நிறுவனத்தில் சேவையாற்றுகின்ற ஊழியர்களின் எண்ணிக்கை முகாமைத்துவ | நிறுவனத்தின் ஊழியர் எண்ணிக்கையை உள்ளடக்கி உத்தேசிக்கப்பட்ட பதவியணியினர் மதிப்பீடு | முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தில் இருந்து அங்கீகரித்துக் கொள்ளல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | சேவைகள் திணைக்களத்தின் அங்கீகரித்துக் கொள்வதற்காக வழங்கப்பட்டிருந்த பரிந்துரை 2024 ஆகஸ்ட் 14 ஆந் திகதி வரையும் அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை. | ஒன்று தயாரித்து முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரத்திற்காக அனுப்பப்பட்டுள்ளது. | |
| (ஆ) | பொது முயற்சிகள் குழுவின் பரிந்துரையின் பிரகாரம் வங்கி இணக்கக் கூற்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | 02 வங்கிக் கணக்குகளுக்காக 2022 ஆம் ஆண்டிற்காக காசேடு மற்றும் வங்கி இணக்கக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டிருந்த போதும் ஏனைய நடைமுறைக் கணக்குகளுக்காக 2022 செப்தெம்பர் மாதம் வரையும் காசேடு தயாரிக்கப்பட்டுள்ளது.<br><br>2023 மற்றும் 2024 ஆம் ஆண்டுகளுக்காக வங்கி இணக்கக் கூற்று தயாரிப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | மிகவும் சரியாகத் தயாரிக்கப்பட்ட காசேட்டை அடிப்படையாகக் கொண்டு மாதாந்த வங்கி இணக்கக் கூற்றுக்கள் தயாரிப்பதற்கு முகாமைத்துவம் உடனடியாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | பொது முயற்சிகள் குழுவின் பரிந்துரையின் பிரகாரம் 2019 ஆம் ஆண்டு முதல் 2023 ஆம் ஆண்டு வரை நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | 2019 ஆம் ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்படுவதுடன் அது முடிவடைந்த பின்னர் பணிப்பாளர் சபைக்கு சமர்ப்பித்து கணக்காய்விற்காக கையளிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.<br>2020, 2021, 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளுக்கான நிதி தகவல்கள், கணக்கீட்டு தகவல்கள் முறைமையில் உள்ளடக்கப்படுவதுடன் அவை முடிவடைந்த பின்னர் ஆண்டிற்குரிய நிதிக் கூற்றுக்கள் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சரியான கணக்கீட்டு தரவுகளை அடிப்படையாகக் கொண்டு வருடாந்த நிதிக் கூற்றுக்கள் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 4.3 உள்ளகக் கணக்காய்வு மற்றும் கணக்காய்வு முகாமைத்துவக் கூட்டங்களை நடாத்துதல்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2023 திசெம்பர் 31 ஆந் திகதி 2023 ஆம் ஆண்டிற்கு உரிய தலைவரால் அங்கீகரிக்கப்பட்டு அனுப்பபட்ட கணக்காய்வுத் திட்டத்தின் பிரகாரம் 2023 ஆம் ஆண்டில் நிறைவேற்ற வேண்டியது என குறித்துரைத்த ரீதியில் இனங்காணப்பட்ட செயற்பாடுகளில் 73 சதவீதம் உரிய காலப் பகுதியின் போது நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. | அமைச்சினால் கணக்குகள் தயாரிப்பதற்காக உள்ளக் கணக்காய்வுப் பிரிவின் உதவி பெற்றுக் கொள்ளப்பட்டமையால் கணக்காய்வுத் திட்டத்திற்கு உரிய அநேகமான நடவடிக்கைகள் தவற விடப்பட்டிருந்தது. | அங்கீகரிக்கப்பட்ட கணக்காய்வு திட்டத்தின் பிரகாரம் வருடாந்த உள்ளக் கணக்காய்வு செயற்பாடுகள் நிறைவேற்றப்படல் வேண்டும். |